## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.61/2020

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 06 –ம் நாள் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.T. இந்திரஜித், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 06.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வீரையன் (PW–1) | வயது | : | 49 /2026 |
| க/த பெயர் | : | திரு. கணேசன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | அசேசம் | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் இந்நீதிமன்றத்தில் வாதி மீது ஒப்பந்தம் ஏற்பட்டதன் மூலம் தாவா சொத்தை உரிமையுள்ள சொத்து என்றும் அதை கிரய ஆவணம் ஏற்படுத்தி தராமல் தொந்தரவு செய்வதாக சொல்லி OS.No.22/2020 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த OS.No.22/2020 வழக்கு சொத்தும் தாவா சொத்தும் ஒரே சொத்து என்றால் சரிதான். இந்த வழக்கின் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை.
2) 21.04.2005 இல் நானும் இந்த வழக்கின் வாதியும் ரூபாய் 17 ஆயிரத்திற்கு தாவா சொத்தை பொறுத்து கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றும் முன் பணமாக ரூபாய் 15 ஆயிரம் பெற்றுக்கொண்டு மீதமுள்ள ரூபாய் 2000 செலுத்தி கிரய ஆவணம் ஏற்படுத்தி தரவேண்டும் என்பது தான் ஒப்பந்தம் என்றால் சரிதான். 21.04.2005 தேதியிட்ட ஒப்பந்தப்படி தான் தாவா சொத்து எனது வசம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். 2005 இல் ஏற்பட்ட ஒப்பந்தம் எவ்வளவு நாட்களுக்கு கெடு வைத்து எழுதப்பட்டது என்றால் 6 மாதம் கெடு வைத்து எழுதப்பட்டது. 21.10.2005 உடன் ஒப்பந்தத்திற்கான காலக்கெடு முடிந்துவிட்டது என்றால் சரிதான்.
3) அந்த ஒப்பந்தப்படி நான் நடந்து கொள்ளவில்லை என்பதால் வாதியானவர் 03.02.2017 எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.4 அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்ட நான் 17.02.2017 இல் வா.சா.ஆ.5 பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.5 பதில் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பை கிரய ஒப்பந்தப்படி தாவா சொத்தை 17 ஆயிரத்திற்கு பேசி முடிக்கப்பட்டு முன்

பணமாக 15 ஆயிரத்தை பெற்றுக்கொண்டு மீதமுள்ள 2000 யை கொடுத்து கிரயம் ஏற்படுத்தி கொள்ள பிரதிவாதி பலமுறை தேடியும் கிடைக்கவில்லை என்றும் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட சங்கதியை சொல்லி தாவா சொத்தை கிரய ஆவணம் ஏற்படுத்தி தரவேண்டும் என்று வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

4) வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் நாங்கள் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளோமா என்றால் செய்துள்ளோம். OS.No.22/2020 இல் வழக்குரையில் சொல்லியுள்ள விபரங்களை யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அந்த வழக்கில் தாவா சொத்து என் வசம் இருப்பதாகவும் அதில் ஆட்டு கொட்டகை போட்டு பராமரித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கு எதிராக தாவா சொத்தை 16 ஆண்டு காலம் அனுபவம் செய்து வருவதால் தாவா சொத்து எனக்கு உரிமையுள்ள சொத்து என்று பதில் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான்.

5) வாதி என்னுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தமானது அக்டோபர் 2005 இல் முடிவடைந்துவிட்டதால் அந்த ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது என்றும், இக்காலாவதியான ஒப்பந்தத்தை வாதியானவர் ரத்து செய்தும் நான் தாவா சொத்தை ஆக்கிரமித்துள்ளதால் தாவா சொத்து வாதிக்கு சட்டப்படி கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்யாததால் எனக்குள்ள உரிமைகள் அற்றுப்போய் விட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.12 18:52:33 +0530

District Munsif
Mannargudi.